IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.156/2012
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரவாகு | Caste | : | |
| Father Name | : | ரத்தினம் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of January, 2026.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. 1999–ல் தங்கராஜிடமிருந்து நான் வாங்கிய சொத்து காலத்திற்கு அதே சர்வே எண்.77/2 என்ற எண்ணில் எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதன்மை சாட்சியத்தில் அதே சர்வே எண்ணில் நான் வாங்குவதற்கு முன்னால் 2 பிளாட்கள் விற்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருப்பதை தற்போது மறைக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாங்கிய பிறகு தான் தெரியும். நான் சொத்தை வாங்குவதற்கு முன்பு யாருக்கு சொந்தம் என்பது தெரியாமல் தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் சொத்தை வாங்கி ஏமாந்துவிட்டதால் சொத்தை எனக்கு விறப்னை செய்த தங்கராஜிடம் சென்று பணத்தை திருப்பி கேட்டு சண்டையிட்டேன் என்றால் சரிதான்.

2. இது சம்பந்தமாக சமாதானம் பேசுவதற்காக முதல் வாதி தெய்வநாயகத்திற்கு நான் கடிதம் ஒன்று எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 என்று சொன்னால் சரிதான். என்னுடைய கடிதத்தில் தங்கராஜ் அது என்னுடைய பாகம் இல்லை அது யாருடைய பாகமோ அவர்களிடம் சென்று வாங்கிக் கொள் என்று கூறினார் என்று நான் எழுதியுள்ளேன் என்று சொன்னால்

சரியல்ல. எனக்கு 2007 ல் தான் தங்கராஜ் என்னை ஏமாற்றிவிட்டார் என்று எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் இல்லை 2003–லேயே தெரியவந்தது. நான் தங்கராஜிற்கு தாவா சொத்தில் உரிமை இல்லாமல் விற்பனை செய்துவிட்டார் என்று தெரிந்திருந்தும் அந்த இடத்தில் வீடு கட்ட முயன்றேன் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட பிறகு தான் நான் வீடு கட்ட ஆரம்பித்தேன்.

3. நான் எனது பதிலுரையில் பிற்பாடு தான் தெரியவந்தது என்று சொல்லியுள்ள நிலையில் நான் எதை வைத்து தெரிந்து கொண்டேன் என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி தான் தெரியும். மேற்படி வாசகத்தை நான் எனது பதிலுரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. நான் எனது பதிலுரையில் சொல்லாமல் பிரமாண வாக்குமூலத்தில் மட்டும் சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று சொன்னால் சரியல்ல. 2003–லேயே அவருக்கு மேற்படி தங்கராஜிற்கு சொத்து உரிமை இல்லை என்று தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் தெற்வநாயகம் அதே சொத்தை 1983 ல் வாங் கியுள்ள நிலையில் அனைத்தையும் மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரில்ல.

4. நான் 2012 ற்கு பிறகு தான் வீடு கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. 2003–லேயே கட்ட முயற்சி செய்தேன். நான் தற்போது இருக்கும் வீடு 2003–லேயே கட்டப்பட்டது. நான் 2007–ல் தான் குடிசை வீடு கட்டியிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2003–லேயே குடிசை வீடு கட்டிவிட்டேன். 2007 ல் லோன் வாங்கி சீட் போட்ட வீடு கட்டினேன். மேற்படி விவரத்தை நான் எனது பதிலுரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. 2003 லிருந்து 2007 வரை நான் அதாவது வீடு கட்டியதற்கான எந்த வரி ரசீதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீது 2012 ற்கான வரி ரசீது என்று சொன்னால் சரிதான் . ஆனால் 2001 லேயே அப்ரூவல் வாங்கியுள்ளேன். நான் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணமானது நகல் என்பதால் அது செல்லுபடி ஆகாது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள வீட்டின் அளவானது கிழக்கு–மேற்கு 30 அடி ஆகும். வடக்கு – தெற்கு 20 அடி ஆகும்.

6. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலேயே, அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ அளவுகளை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2003 லேயே எனக்கு தங்கராஜிற்கு நிலம் சொந்தமில்லை என்று தெரிந்திருந்தும் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் வீடு கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இடம் வாங்கியதற்கு பிறகு பட்டா வாங்கவில்லை. எனக்கு உரிமை இல்லாத காரணத்தால் தான் நான் பட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல.

7. ஏற்கனவே கட்டிய வீட்டிற்கு பின் பக்கம் 10 அடி தள்ளி மீண்டும் நீட்டிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தங்கராஜ் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் தங்கராஜிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் அவருக்கு எந்த ஆவணம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1983 ல் தெய்வநாயகத்திற்கு, தங்கராஜ் அவரது பாகத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது எனக்கு பிறகு தான் தெரிய

வந்தது. வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்பதாலும் அத்துமீறி நான் கட்டியுள்ளேன் என்று வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை–இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI